**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.01/2022**
**in**
**O.S.No.10/2021**

V.முனியசாமி வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

V.பேச்சி வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 28.02.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.S.விஜயபிரசாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தர்மர் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

கடந்த 09.10.2021 ம் தேதி 1 ம் பிரதிவாதி காலமாகிவிட்டதால் அவரது வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுக்காததால் வழக்கானது Abatement ஆகி விட்டதால் மனுதாக்கல் செய்ய 286 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**</u>

வழக்கில் 1 ம் பிரதிவாதி பேச்சி என்பவர் கடந்த 09.10.2021 ம் காலமாகி விட்டதால் 1 ம் பிரதிவாதிக்கு உடனடியாக வாரிசு சேர்க்க வேண்டிய விபரம் மனுதாரருக்கு தெரியாததால் மேற்படி வழக்கில் 1 ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அவரை தொடர்பு கொண்டு

தெரிவித்தபோது தான் இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு வாரிசு விபரம் சேர்க்க வேண்டும் என்ற விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும், மனுதாரர்கள் தரப்பில் வாரிசு விபரம் தர வேண்டி பிரதிவாதிகள் தரப்பிற்கு குறிப்பாணை அளித்தும் வாரிசு விபரம் வழங்காததால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், 1ம் பிரதிவாதிக்கு குறிப்பிட்ட 90 நாட்களுக்குள் வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள Abatement–ஐ ரத்து செய்து வாரிசு மனுவை ஏற்றுக்கொண்டும், கடந்த 09.10.2021ம் தேதி ஏற்பட்ட Abatement யை ரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட 286 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 2, 3, 4, 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1–ம் பிரதிவாதி பேச்சியம்மாள் கடந்த 09.10.2021–ம் தேதியும், 6–ம் பிரதிவாதி ஆராயி கடந்த 01.02.2020–ம் தேதியும், 7–ம் பிரதிவாதி பொட்டையம்மாள் கடந்த 30.03.2012–ம் தேதியும் இறந்துவிட்டனர் என்றும், மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் ஒரே ஊரில் பிறந்து வசித்து வரும் நிலையில் 1–ம் பிரதிவாதியின் வாரிசுகள் விபரம் தெரியாது என்று மனுதாரர்கள் கூறுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா வழக்கில் கண்டுள்ள 1, 6, 7 ஆகிய பிரதிவாதிகள் இறந்துவிட்ட விபரத்தை குறிப்பாணை மூலம் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும், 1–ம் பிரதிவாதியின் உண்மையான பெயர் பேச்சியம்மாள் என்றும், இறந்துவிட்ட 1–ம் பிரதிவாதியின் இறப்பு சான்றிதழில் அவரது பெயர் பேச்சியம்மாள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 7–ம் பிரதிவாதியின் உண்மையான பெயர் பொட்டையம்மாள் என்றும், மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு மனுாரர்கள் குறிப்பிட்டுள்ள காரணங்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்பதால் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி. அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி 09.10.2021ல் இறந்து விட்டதாகவும், அவருக்கு வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து 90 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்காததால் வழக்கு Abate ஆகி விட்டதாகவும், அவ்வாறு Abate ஆகி விட்ட உத்தரவை ரத்து செய்வதற்கு மனுதாக்கல் செய்வதில் 286 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டு விட்டதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதி கடந்த 09.10.2021ம் தேதி இறந்து விட்டார் என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதியான எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் 1ம் பிரதிவாதியின் பெயர் பேச்சியம்மாள் என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெயர் தவறாக இருந்தால் அதனைப் பற்றி தற்சமயம் இம்மனுவில் தீர்மானிக்க இயலாது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவில் மனுதாரர் காலதாமதத்திற்கு போதுமான காரணங்கள் தெரிவிக்கவில்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரின் மனுவில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட விபரத்தினை எதிர்மனுதாரர் தரப்பில் சரியான நேரத்தில் தெரிவிக்காததால்தான் காலதாமதம் ஏற்பட்டு விட்டதாக தெரிவித்துள்ள காரணங்கள் ஏற்கத்தக்கதாகவே உள்ளன.

இருந்தபோதிலும் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ள மனுதாரர் தரப்பில்தான் இறந்துவிட்ட 1ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை உரிய காலத்தில் சேர்த்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே மனுதாரர் தரப்பு காலதாமதத்தின் அடிப்படையில் அசல் வழக்கு காலதாமதப்படுத்தப்பட்டுள்ளதால் இம்மனுவில் செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்படுகிறது.

இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.500/-யை மனுதாரர் வரும் 20.03.2024 ம் தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

அழைக்க 21.03.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 13.03.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.03.13 11:06:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.03.13 11:07:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2022
in
O.S.No.10/2021

Date:13.03.2024
IA order